Reg. No. | | | | | | |

# முதற் பருவ தொகுத்தறி மதிப்பீடு, செப்டம்பர் - 2018

ஒன்பதாம் வகுப்பு] சமூக அறிவியல் [காலம் : 2.30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 60)

பிரிவு–அ

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: $5 \times 1 = 5$

1. கன்பூசியனிசம் ஒரு மதம் என்பதாகக் கருதப்படாமல் ஒரு சமூக அமைப்பாக, அறம்சார் தத்துவ முறையாகவே கருதப்படுகிறது.
   அ) சரியான கூற்று ஆ) தவறான கூற்று இ) பாதி மட்டுமே சரியான கூற்று ஈ) ஏதுமில்லை
2. சூரியக் கதிர்வீசல் மற்றும் சூரிய வெப்ப அலைகளிலிருந்து வரும் வெப்பத்தை ----- ஈர்த்து வளி மண்டலத்தை வெப்பமாக வைக்கிறது.
   அ) ஆக்ஸிஜன் ஆ) கார்பன்–டை–ஆக்சைடு இ) நைட்ரஜன் ஈ) ஓசோன்
3. பாராளுமன்ற இரு அவைகள் மற்றும் மாநில சட்டமன்றங்களில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் 'தேர்தல் குழாம்' (electoral colleague)ல் இடம்பெற மாட்டார்கள்.
   அ) இக்கூற்று சரி ஆ) இக்கூற்று தவறு இ) பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் இடம் பெறுவர் ஈ) மாநிலங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் இடம் பெறுவர்
4. புவியின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பத்தின் சராசரி அளவு
   அ) 12°C ஆ) 14°C இ) 13°C ஈ) 15°C
5. ----- புவியின் முக்கிய ஆற்றல் மூலமாகும்.
   அ) சூரியன் ஆ) சந்திரன் இ) நீர் ஈ) நெருப்பு

II கோடிட்ட இடத்தை நிரப்புக : $4 \times 1 = 4$

1. மண்பாண்டங்களை சுடுவதற்கு முன்னர் ----- கொண்டு மெருகேற்றினர்.
2. ---- என்ற நூல் தமிழகத்தின் வாழ்வு முறையை திணை முறையாக விவரித்துள்ளது.
3. ----- எனும் அடுக்கு பூமியை கதிர்வீச்சிலிருந்து பாதுகாக்கிறது.
4. இந்தியாவின் வேலைவாய்ப்பின் தன்மை -------.

III பொருத்துக : $5 \times 1 = 5$

| | | | |
|---|---|---|---|
| 1. | மாயோஸ்ரம் | – | இதில் ஏதும் இல்லை |
| 2. | நோட்டா (NOTA) | – | ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று |
| 3. | கிளையாறு | – | பதினெண்கீழ் கணக்கு நூல்களுள் ஒன்று |
| 4. | சிலப்பதிகாரம் | – | சங்க கால துறைமுகம் |
| 5. | அரிக்கமேடு | – | ஆற்றின் மூப்பு நிலை |
| | | – | எந்த வேட்பாளரையும் தேர்ந்தெடுக்க விருப்பமில்லை |
| | | – | இந்தியாவின் மிக ஈரப்பதமான பகுதி |

IV ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து அனைத்து வினாக்களுக்கும் விடையளி : $1 \times 4 = 4$

1. ஜொராஸ்ட்ரியனிசம்
   அ) இதைத் தோற்றுவித்தவர் யார் ?
   ஆ) வழிபாட்டின் உயர்ந்த வடிவம் எது ?
   இ) அவர்கள் வணங்கிய கடவுளின் பெயர் யாது ?
   ஈ) ஜொராஸ்டிரியர் எதனைப் போதித்தார் ?
2. நடு கற்கள்
   அ) இறந்த வீரர்களை மக்களை எவ்வாறு நினைவு கூர்ந்தன ?
   ஆ) எந்த சங்க இலக்கியம் நடுகற்கள் குறித்தும் அவற்றை வழிபடும் முறைகளை குறித்தும் கூறுகிறது ?
   இ) தேனி மாவட்டத்தில் உள்ள எந்த ஊரில் நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டன ?
   ஈ) அங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள வீரனின் பெயர் என்ன?
3. தொடக்க கால நாகரிகம்
   அ) நாகரிகம் என்றால் என்ன ?
   ஆ) தொடக்க கால நாகரிகங்களின் பெயர்களை எழுதுக.
   இ) பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரமாக இருந்தவை எவை ?
   ஈ) நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கிய போது என்ன நடந்தது ?

(திருப்புக

## பிரிவு–II

$5 \times 2 = 10$

V சுருக்கமான விடையளி. பகுதி–அ மற்றும் பகுதி–ஆவில் இரண்டு வினாக்களுக்கும் பகுதி–இ–யில் ஒரு வினாவுக்கும் விடையளி.

### பகுதி–அ

1. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தை எழுதுக.
2. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும். – விவரி.
3. நடு கற்கள் – குறிப்பு வரைக.
4. சங்க காலத்தின் தொல்லியல் ஆய்வு மற்றும் பண்பாட்டு பொருட்கள் பற்றி குறிப்பு வரைக.
5. மும்மணிகள் (திரிரத்னா) – இச்சொல்லை ஆராய்க.

### பகுதி – ஆ

1. புவித்தட்டுகள் – வரையறு.
2. பசிபிக் நெருப்பு வளையம் பற்றி குறிப்பு வரைக.
3. வரையறு : தொங்கும் பள்ளத்தாக்கு, மொரைன்
4. காற்றின் நான்கு பெரும் பிரிவுகள் யாவை ? மாறுதலுக்கு உட்பட்ட காற்றுகள்–வரையறு.

### பகுதி – இ

1. ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையைக் கூறுக.
2. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.
3. சூரிய சக்தி என்றால் என்ன ?

VI காரணம் கூறுக (ஏதேனும் இரண்டு) : $2 \times 2 = 4$

1. வெப்ப சலன மழை 4 மணி மழை என்று அழைக்கப்படுகிறது.
2. சூறாவளிகள் அதிக உயிர்ச் சேதத்தையும் பொருள் சேதத்தையும் ஏற்படுத்துகிறது
3. புவி மேலோடு கவசத்தின் மீது மிதக்கிறது.
4. ஓதப் பொங்குமுகங்களில் மென்மையான வண்டல் படிவுகள் குறைவு

VII வேறுபடுத்துக (ஏதேனும் இரண்டு) : $2 \times 2 = 4$

1. டெல்டா மற்றும் ஓதப்பொங்கு முகம்
2. முதன்மை அலைகள் மற்றும் இரண்டாம் நிலை அலைகள்
3. வானிலை மற்றும் காலநிலை
4. காற்று வீசும் பக்கம் காற்று மோதாப் பக்கம்

## பிரிவு–III

$4 \times 5 = 20$

VIII ஒரு பத்தியளவில் விடையளி. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வினா விடையளி.

### பகுதி–அ

1. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது. தெளிவுபடுத்துக.
2. ஹீரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் – இவற்றை அவற்றின் முக்கிய கூறுகளுடன் விவரி.
3. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எழுதுக.

### பகுதி – ஆ

1. எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை ?
2. வானிலைச் சிதைவு என்றால் என்ன ? வகைப்படுத்துக.
3. வளிமண்டலத்தின் அமைப்பை பற்றி எழுதுக.

### பகுதி – இ

1. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை ? விவரி.
2. வயது வந்தோர் வாக்குரிமை பற்றி எழுதுக. மற்றும் பலகட்சி ஆட்சி முறையை விவரி.

### பகுதி–ஈ

1. விவரி : அ) முதன்மை துறை ஆ) இரண்டாம் துறை இ) சார்புத் துறை
2. புதுப்பிக்கக் கூடிய வளம், புதுப்பிக்க இயலா வளம் – விளக்குக.

IX கொடுக்கப்பட்டுள்ள உலக எல்லை வரைபடத்தில் கீழ்க்காண்பவற்றை குறிக்கவும் $8 \times ½ = 4$

1. சுண்ணாம்பு பிரதேசப் பகுதி 2. வெப்ப பாலைவனம் 3. பியூஜி மலை
4. தமிழ்நாடு 5. ரோம் 6. சிந்து நதி 7. சீனா 8. ஜப்பான்.